


கணிதம்

வேடிக்கையானது

1

ந. வப்னயார்

கணிதம் வேடிக்கையானது


1

விளக்கப்படங்கள்: பி. ரைட்மேன்

தமிழில்: வெ.சு.காயத்ரி



Prosveshcheniye Publishers
Moscow 1984








கூடுதல் கண்டு விடையை எழுதுங்கள்.

1 பெரிய குரங்கு 5 வாழைப்பழங்களையும், சிறிய குரங்கு 2 வாழைப்பழங்களையும் சாப்பிட்டுவிட்டது. இரண்டு குரங்குகளும் சேர்ந்து எத்தனை வாழைப்பழங்களைச் சாப்பிட்டன?

2 ஒவ்வொரு கணக்கையும் அதன் விடையுடன் இணைக்கவும்.



3 செங்கோணங்களைக் குறிக்கும் எண்களை எழுதுங்கள்.



4 வெற்றுத் தட்டுகளில் சரியான எண்ணிக்கையிலான ஆரஞ்சுப் பழங்களை வரையவும்.



இரண்டு ஆரஞ்சு பழங்களை நீக்கவும்.

இரண்டு ஆரஞ்சு பழங்களைச் சேர்க்கவும்.

5 விடுபட்ட எண்களைக் கட்டங்களில் எழுதுக.

5+☐=8 ☐+2=7

6+☐=9 ☐+3=10

2+☐=6 ☐+6=8

4+☐=9 ☐+8=10

6 விடுபட்ட கட்டங்களை சரியான எண்களால் நிறைவு செய்க.

47	48	49									58
75	74	73									64



7 கூடுதல் கண்டு விடையை எழுதுங்கள்.

பாம்பாட்டியிடம் 5 பெரிய பாம்புகளும் 10 சிறிய பாம்புகளும் உள்ளன. அவரிடம் மொத்தம் எத்தனை பாம்புகள் உள்ளன?

☐

8 விடுபட்ட எண்களைக் கட்டங்களில் நிரப்புக..

8=2+☐+☐

9=☐+4+☐

10=☐+☐+5

7=1+☐+☐

9 கீழ்கண்டவாறு எண்கள் ஒவ்வொன்றிலிருந்தும் 10-ஐக் கழிக்கவும்:

74	66	28	91	22	19	15	20	16	10	12	11
64	56										

10 கணக்கைச் செய்து விடையை எழுதுங்கள்.

5 புலிக்குட்டிகள் காட்டில் விளையாடிக் கொண்டிருந்தன. பிறகு 2 புலிக்குட்டிகள் தப்பி ஓடிவிட்டன.இன்னும் த்தனை புலிக்குட்டிகள் மீதமுள்ளன?



11 கீழ்கண்டவாறு சரியான கூடுதல்களையும் வேறுபாடுகளையும் எழுதுங்கள்.

எண்கள்	5 and 3	4 and 5	9 and 1	3 and 7	8 and 2
கூடுதல்	8				
வேறுபாடு	2				




12 ஒரு சதுரம் அமைக்க, ஒரே நீளமுள்ள எத்தனை சிறிய குச்சிகள் தேவைப்படும்? ஒரு சதுரத்தை வரையவும்.

13 கணக்கைச் செய்து விடையை எழுதுங்கள்.

முதல் ரயில் பெட்டியில் 45 பேரும், மற்றொரு பெட்டியில் 40 பேரும் உள்ளனர். முதல் பெட்டியில் கூடுதலாக எத்தனை பேர் உள்ளனர்?

14 கூடுதல் 10 வருமாறு விடுபட்ட எண்களை எழுதுக.



15 எண்களை வரிசைப்படி எழுதி, பிறகு அவற்றைப் படியுங்கள்.

25	26	27							
37	38	39							
52	53	54							

கணக்கைச் செய்து விடையை எழுதுங்கள்.
கணக்கைச் செய்து விடையை எழுதுங்கள்.


16 பையனுக்கு 14 வயது, அவனுடைய சகோதரிக்கு 10 வயது.
சகோதரன் சகோதரியை விட எவ்வளவு மூத்தவன்?
சகோதரனை விட சகோதரி எவ்வளவு இளையவள்?



17 அம்புக்குறிகளுக்கு மேலே சரியான குறியீடுகளையும் எண்களையும் எழுதுங்கள்.

1 →(+2) 3 →(−1) 2 →(+5) 7 → 3 → 8 → 9 → 19

18 செவ்வகங்களைத் தேர்வு செய்து அவற்றுக்கு வண்ணம் தீட்டவும்.



கணக்கைச் செய்து விடையை எழுதுங்கள்.


19 ஒரு கடைக்காரரிடம் 14 அன்னாசிப்பழங்கள் உள்ளன.
அவற்றில் 4, மேசையின் மீது கிடக்கின்றன. மீதமுள்ளவை கூடையில் உள்ளன.
கூடையில் இப்போது எத்தனை அன்னாசிப்பழங்கள் உள்ளன ?



20 விடையாக 8 வரும் கணக்குகளை அடிக்கோடிடுங்கள்.

3+5	6+2	10−4	1+7
3+2	10−2	5+3	2+4
10−3	4+4	9−1	7+1

21 வெற்று சதுரங்களில் விடுபட்ட வடிவியல் வடிவங்களை வரையவும்.







22 கணக்கைச் செய்து விடையை எழுதுக.

முதல் பெட்டியில் 30 இனிப்புகள் உள்ளன, ஆனால் இரண்டாவது பெட்டியில் 10 இனிப்புகள் குறைவாக உள்ளன. இரண்டாவது பெட்டியில் எத்தனை இனிப்புகள் உள்ளன?




23 ஒவ்வொரு கட்டத்திலும் சில எண்களை எழுதி, குறியீடுகளை கவனித்து சரியான விடையைப் பெறுங்கள்.


□ □ □ − □ = □

24 விடுபட்ட கட்டங்களை சரியான எண்களால் நிரப்புக.

+	50	20	30	40	
	30	60			50
முடிவு	80		90	70	100

கணக்கைச் செய்து விடையை எழுதுக.





25 ஒரு மரத்தில் 10 பறவைகள் அமர்ந்திருந்தன. மேலும் சில பறவைகள் வந்தன, ஆக மொத்தம் 17 பறவைகள் இருந்தன. எத்தனை பறவைகள் வந்தன?


□

26 கொடுக்கப்பட்ட விடையைப் பெற, விடுபட்ட குறியீடையும் (+ அல்லது -) சரியான எண்ணையும் நிரப்பவும்.



5 + □ = 7	6 ... □ = 2
6 ... □ = 10	8 ... □ = 10
8 ... □ = 3	1 ... □ = 8
9 ... □ = 8	4 ... □ = 1

27 இடதுபுறத்தில் உள்ள வடிவமைப்பை கவனிக்கவும். வலதுபுறத்தில் உள்ள வடிவமைப்பில் விடுபட்ட வடிவியல் வடிவங்களைச் சேர்த்து வண்ணம் தீட்டவும்.



கணக்கைச் செய்து விடையை எழுதுக.


28 அன்னாசிப்பழத்தின் எடை 2 கிலோ.
முலாம்பழத்தின் எடை 5 கிலோ.
அன்னாசிப்பழத்தை விட முலாம்பழத்தின் எடை எத்தனை கிலோ அதிகம்?
அன்னாசிப்பழம் முலாம்பழத்தை விட எத்தனை கிலோ எடை குறைவு?




29 ஒரே விடையைக் கொண்ட கூடுதல்களை கோடுகளால் இணைக்கவும்.

52+3	85+5
61+6	27+40
72+4	35+20
83+7	46+30


30 இந்தக் கோட்டில் எத்தனை பாகங்கள் உள்ளன?



அதே எண்ணிக்கையிலான சிறிய குச்சிகளை எடுக்கவும். அவற்றை ஒன்றாகச் சேர்த்து வெவ்வேறு வடிவியல் வடிவங்களை உருவாக்குக. உருவாக்கிய வடிவங்களை வரைக.

கணக்கைச் செய்து விடையை எழுதுக.

31 தட்டில் 9 ரொட்டித் துண்டுகள் இருந்தன. குழந்தைகள் 2 ரொட்டித் துண்டுகளை எடுத்துக் கொண்டனர். இப்போது எத்தனை ரொட்டித் துண்டுகள் மீதமுள்ளன?



32 சரியான கூடுதலை நிரப்புக.

23	+2	25
	+30	
	+7	
	+5	

33 இந்தக் கோட்டை அளக்கவும் ☐ செ.மீ.

இந்தக் கோட்டை விட 3 செ.மீ. நீளமான ஒரு கோடு வரைக. அதன் நீளம் என்ன? ☐ செ.மீ.

கணக்கைச் செய்து விடையை எழுதுக.

34 இரண்டு சிறுமிகள் வண்ணக் காகிதத்தில் வட்டங்களை வெட்டினர். ஒரு சிறுமி 17 வட்டங்களையும், மற்றொரு சிறுமி அதைவிட 6 வட்டங்கள் குறைவாகவும் வெட்டினாள். இரண்டாவது சிறுமி எத்தனை வட்டங்களை வெட்டினாள்?

☐



இரண்டாவது சிறுமி வெட்டி எடுத்த வட்டங்களை வரைக. அவற்றுக்கு வெவ்வேறு நிறங்களில் வண்ணம் தீட்டவும்.

35 இந்த வடிவமைப்பைத் தொடருங்கள். முக்கோணங்களுக்கு வண்ணம் தீட்டுங்கள்.



36 மேலே உள்ள எண்களிலிருந்து கீழேயுள்ள எண்களை கழிக்கவும்

—	45	56	70	38	53	89	94
	3	40	8	20	2	7	60
பதில்	42						

கணக்கைச் செய்து விடையை எழுதுக.



37 குழந்தைகள் விழாவிற்காக 10 பலூன்கள் வாங்கப்பட்டன. அவற்றில் 6 பச்சை நிறத்திலும், மீதமுள்ளவை மஞ்சள் நிறத்திலும் இருந்தன. மஞ்சள் நிற பலூன்களின் எண்ணிக்கை எவ்வளவு?

பலூன்களுக்குச் சரியாக வண்ணம் தீட்டவும்.

☐

38 ஒவ்வொரு கூடுதலையும் அதன் விடையுடன் இணைக்கவும்.

45 − 4	41	52 + 7
29 + 30	76	28 + 2
46 + 30	30	72 + 4
27 + 3	66	62 + 6
68 − 2	59	61 − 20



* **39** ஒரு கிலோ இரும்பு அல்லது ஒரு கிலோ பஞ்சு, இதில் எது அதிக எடை கொண்டது?

* இந்த குறியீடு தொடர்பான புதிர்களுக்கான விடைகள் பக்கம் 42-இல் காணப்படும்.

கணக்கைச் செய்து விடையை எழுதுக.

40 இந்தச் சிறுவன் முதல் லாரியில் 5 பொம்மை விலங்குகளையும், இரண்டாவது லாரியில் 3 பொம்மை விலங்குகளையும் வைத்துள்ளான். இரண்டு லாரிகளிலும் மொத்தம் எத்தனை பொம்மை விலங்குகள் உள்ளன?



41 விடையாக 36 வரும் கணக்கிற்கு கோடிடுங்கள்.

40 − 4	100 − 70	32 + 4
86 − 40	33 + 3	46 − 20
16 + 20	38 − 2	66 − 30
48 − 2	26 + 10	31 + 5

*** 42** கணக்கைச் செய்து விடையை எழுதுங்கள்.

ஒரு பையனுக்கு மூன்று சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் உள்ளனர். அந்தக் குடும்பத்தில் மொத்தம் எத்தனை குழந்தைகள் உள்ளனர்?



கணக்கைச் செய்து விடையை எழுதுங்கள்.

43 குழந்தைகள் விடுமுறைக்காகத் தங்கள் அறையை அலங்கரித்து உள்ளனர். அவர்கள் ஒரு சுவரில் 18 கொடிகளையும், மற்றொரு சுவரில் 6 கொடிகள் குறைவாகவும் மாட்டினர். அவர்கள் இரண்டாவது சுவரில் எத்தனை கொடிகளை மாட்டினார்கள்?

44 ஒவ்வொரு கணக்கையும் அதன் விடையுடன் இணைக்கவும்.

6+9, 8+8, 9+3, 7+4, 9+7, 8+7, 6+6, 5+7, 3+8, 4+8

15, 16, 11, 12

*** 45** கணக்கைச் செய்து விடையை எழுதுங்கள்.

7 மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டு மேசையில் வைக்கப்பட்டன. அவற்றில் இரண்டு அணைந்து விட்டன. மேசையில் மீதமுள்ள மெழுகுவர்த்திகளின் எண்ணிக்கை எவ்வளவு?


கணக்கைச் செய்து விடையை எழுதுங்கள்.

46 குழந்தைகள் பெட்டியிலிருந்து 3 பொம்மைகளை எடுத்துவிட்டனர். இப்போது அங்கு 4 பொம்மைகள் மீதமுள்ளன. அந்தப் பெட்டியில் மொத்தம் எத்தனை பொம்மைகள் இருந்தன?

☐



47 விடுபட்ட எண்களை வட்டங்களில் எழுதவும்.



***48** கணக்கைச் செய்து விடையை எழுதுங்கள்.


ஒரு முட்டையை வேகவைக்க 3 நிமிடங்கள் ஆகும். இரண்டு முட்டைகளை வேகவைக்க எவ்வளவு நேரம் ஆகும்?

☐

கணக்கைச் செய்து விடையை எழுதுங்கள்.

49 ஒரு படகு 10 பயணிகளையும், மற்றொரு படகு 12 பயணிகளையும் ஏற்றிச் செல்கின்றன. இரண்டாவது படகு கூடுதலாக எத்தனை பயணிகளை ஏற்றிச் செல்கிறது?

☐



50 பெட்டிக்கு வெளியே உள்ள எண்களை, கட்டங்களில் உள்ள எண்களிலிருந்து கழித்து விடையை காலி கட்டங்களில் எழுதவும்.

−7

14	7
12	
11	
13	
15	
16	

−8

12	4
17	
11	
15	
13	
16	

***51** கணக்கைச் செய்து விடையை எழுதுங்கள்.

புல்வெளியில் ஆறு சிட்டுக்குருவிகள் அமர்ந்திருந்தன. ஒரு பூனை பதுங்கி வந்து ஒரு சிட்டுக்குருவியைப் பிடித்தது. புல்வெளியில் மீதமிருந்த சிட்டுக்குருவிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

☐

52 ஒரு சிறுமி ஒரு பூச்சாடியில் 7 பூக்களை வைத்தாள். மற்றொரு பூச்சாடியில் அவள் முதல் பூச்சாடியை விட 2 பூக்கள் அதிகமாக வைக்கப் போகிறாள். இரண்டாவது பூச்சாடியில் எத்தனை பூக்கள் இருக்கும்? இரண்டாவது பூச்சாடியில் உள்ள பூக்களை வரையவும். ☐



*** 53** ஒரே நீளமுள்ள 7 சிறிய குச்சிகளை எடுத்து, அவற்றை இரண்டு சதுரங்களாக அடுக்கவும். அந்தச் சதுரங்களை வரையவும்.

54 இந்த எண்களிலிருந்து 9-ஐக் கழிக்கவும்.

12	14	17	13	16	15	18	20
3							

55 ஒரு கூடையில் 12 கிலோ மாம்பழங்கள் இருந்தன. சில மாம்பழங்களை வெளியே எடுத்தபோது, 9 கிலோ மீதமிருந்தது. கூடையிலிருந்து எவ்வளவு கிலோ மாம்பழங்கள் வெளியே எடுக்கப்பட்டன? ☐



56 அம்புக்குறிகளுக்கு மேலே சரியான குறியீடுகளையும் எண்களையும் எழுதுக..

(5) —+7→ (12) → (8) → (17) → (9) → (14) → (7)

*** 57** ஒரு குழாயிலிருந்து வரும் 6 லிட்டர் தண்ணீரை இரண்டு ஜாடிகளைப் பயன்படுத்தி எப்படி அளப்பீர்கள்? இந்த ஜாடிகளில் ஒன்று 2 லிட்டர் கொள்ளளவும், மற்றொன்று 5 லிட்டர் கொள்ளளவும் கொண்டுள்ளன..




கணக்கைச் செய்து விடையை எழுதுங்கள்.

58 ஒரு பெண் ஒரு நாளில் 12 கிலோ தேயிலையையும், மற்றொரு பெண் 9 கிலோ தேயிலையையும் பறித்தனர். அவ்விரு பெண்களும் சேர்ந்து மொத்தம் எத்தனை கிலோ. தேயிலையைப் பறித்தனர்?

59 ஒவ்வொரு கூடுதலையும் அதன் விடையுடன் இணைக்கவும்.

25+9	53	28+6
37+8	34	29+8
48+5	37	36+9
46+7	45	49+4

* **60** இந்த வடிவியல் வடிவங்களில் எது வித்தியாசமானது?



61 கணக்கைச் செய்து விடையை எழுதுங்கள்.

ஒரு சிறுமியிடம் 15 பூக்கள் இருந்தன. பிறகு அவள் பல பூக்களைத் தன் தோழிக்குக் கொடுத்தாள். இப்போது அவளிடம் 8 பூக்கள் மீதமுள்ளன. அந்தச் சிறுமி தன் தோழிக்கு எத்தனை பூக்களைக் கொடுத்தாள்?




62 ஒரே விடையைக் கொண்ட கணக்குகளை இணைக்கவும்.

28 − 9	65 − 7
46 − 8	34 − 9
32 − 7	42 − 4
62 − 4	22 − 3

* **63** கணக்கைச் செய்து விடையை எழுதுங்கள்.

ஒரு சிறுவன் ஒரு வீட்டின் இரண்டாவது மாடிக்குச் செல்ல வேண்டும். ஒவ்வொரு மாடிக்கும் இடையில் 20 படிகள் உள்ளன. அந்தச் சிறுவன் எத்தனை படிகள் ஏற வேண்டும்?






64 கணக்கைச் செய்து விடையை எழுதுங்கள் .

ஒரு விவசாயியிடம் 12 எருமைகள் இருந்தன. முதலில் அவர் 2 எருமைகளை விற்றார், பிறகு மேலும் 5 எருமைகளை விற்றார். அவரிடம் இப்போது எத்தனை எருமைகள் மீதமுள்ளன? ☐

65 விடுபட்ட எண்களை வட்டங்களில் எழுதவும்.



*66 கணக்கைச் செய்து விடையை எழுதுங்கள்.

ஒரு சிறுவன் ஒரு குச்சியை 7 துண்டுகளாக வெட்டினான். அவன் அதை எத்தனை முறை வெட்டினான்? ☐



கணக்கைச் செய்து விடையை எழுதுங்கள்.

67 இந்தச் சிறுவனிடம் 44 தபால்தலைகள் இருந்தன. அவன் சில தபால்தலைகளை தன் நண்பனுக்குக் கொடுத்த பிறகு அவனிடம் 27 மீதமிருந்தன. அவன் தன் நண்பனுக்கு எத்தனை தபால்தலைகளைக் கொடுத்தான்? ☐

68 விடையாக 45 வரும் கணக்குகளை அடிக்கோடிடுங்கள்.

32+13	47−12	36+9
56−9	21+24	54−9
11+34	59−14	69−14
46+9	23+22	38+7

*69 5 சிறிய குச்சிகளைப் பயன்படுத்தி 2 முக்கோணங்களையும் 1 நாற்கோணத்தையும் உருவாக்கி, அந்த உருவங்களை வரையவும்.

70 ஒரு தோட்டத்தில் 18 யானைகளும், மற்றொன்றில் 21 யானைகளும் வேலை செய்து கொண்டிருந்தன. இரண்டாவது தோட்டத்தை விட முதல் தோட்டத்தில் எத்தனை யானைகள் குறைவாக வேலை செய்தன? ☐



71 ஒவ்வொரு கணக்கையும் அதன் விடையோடு இணைக்கவும்..

48+7	36	48−12
59−23	63	22+41
94−31	79	33+22
37+42	55	82−3

* **72** கணக்கைச் செய்து விடையை எழுதுக.

ஒரு தாய்க்கு 5 மகள்கள் உள்ளனர். ஒவ்வொரு மகளுக்கும் ஒரு சகோதரன் இருக்கிறான். அந்தத் தாய்க்கு மொத்தம் எத்தனை குழந்தைகள் உள்ளனர்? ☐



73 ஒரு குரங்கிடம் நிறைய வாழைப்பழங்கள் இருந்தன. அது 12 எண்ணம் சாப்பிட்ட பிறகு, அதனிடம் 15 பழங்கள் மீதமிருந்தன. தொடக்கத்தில் குரங்கிடம் எத்தனை வாழைப்பழங்கள் இருந்தன? ☐

74 விடுபட்ட எண்களைக் கண்டுபிடித்து, அவற்றை காலி இடங்களில் நிரப்பவும்.

—	45		37			54		60	
		58	12	36	44		71		18
பதில்	21	8		47		33	14	45	9

கணக்கைச் செய்து விடையை எழுதுங்கள்.


* **75** சில யானைகள் காட்டின் வழியே நடந்து கொண்டிருந்தன. ஒரு யானை முன்னால் சென்றது, இரண்டு யானைகள் பின்னால் சென்றன. இரண்டு யானைகள் முன்னால் சென்றன, ஒரு யானை பின்னால் சென்றது. ஒரு யானை இரண்டு யானைகளுக்கு இடையில் நடந்து கொண்டிருந்தது. மூன்று யானைகள் ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாக நடந்து கொண்டிருந்தன. காட்டின் வழியே மொத்தம் எத்தனை யானைகள் நடந்து கொண்டிருந்தன? ☐

கணக்கைச் செய்து விடையை எழுதுங்கள்.



76 மூன்று ஆப்பிள் மரங்களிலிருந்து 30 ஆப்பிள்கள் கீழே விழுந்தன. ஒரு மரத்திலிருந்து 18 ஆப்பிள்களும், இரண்டாவது மரத்திலிருந்து மேலும் 3-ம் கீழே விழுந்தன. மூன்றாவது மரத்திலிருந்து எத்தனை ஆப்பிள்கள் கீழே விழுந்தன?

77 விடுபட்ட எண்களை வட்டங்களில் எழுதவும்.



***78** ஒரே நீளமுள்ள 5 சிறிய குச்சிகளின் உதவியுடன் 3 நாற்கோணங்களை உருவாக்கி, அவற்றை வரையவும்.

கணக்கைச் செய்து விடையை எழுதுங்கள்.

79 ஒரு கூண்டில் 7 கிளிகளும், மற்றொரு கூண்டில் கூடுதலாக 3 கிளிகளும் இருந்தன. மூன்றாவது கூண்டில், இரண்டாவது கூண்டை விட 4 கிளிகள் அதிகமாக இருந்தன. இரண்டாவது மற்றும் மூன்றாவது கூண்டுகளில் மொத்தம் எத்தனை கிளிகள் இருந்தன?



80 ஒவ்வொரு கணக்கையும் அதன் விடையுடன் இணைக்கவும்.

18 + 7   52 − 7   70   100 − 30

25   50 − 25   45   35 + 35   14

28 + 17   8 + 6   52 − 38

***81** **கணக்கைச் செய்து விடையை எழுதுங்கள்.**

ஒரு சகோதரன் ஒருமுறை தன் சகோதரியிடம், "நான் உன்னை விட மூன்று வயது மூத்தவன். இன்னும் இரண்டு வருடங்களில் நான் உன்னை விட எத்தனை வயது மூத்தவனாக இருப்பேன்?" என்று கேட்டான்.

கணக்கைச் செய்து விடையை எழுதுங்கள்.

82 ஒரு வகுப்பறையில் 17 மேசைகள் இருந்தன. முதலில் 3 மேசைகள் நீக்கப்பட்டன; பிறகு, மேலும் 5 மேசைகள் நீக்கப்பட்டன. வகுப்பறையில் மீதமுள்ள மேசைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

☐

83 ஒரே விடையைக் கொண்ட கணக்குகளை இணைக்கவும்.

75 + 16 = ☐	60 − 9 = ☐
48 − 9 = ☐	24 + 15 = ☐
97 − 44 = ☐	38 + 53 = ☐
63 − 12 = ☐	22 + 31 = ☐



***84** ஒரு சிறுமியிடம் இரண்டு குவளைகள் உள்ளன. ஒரு குவளையில் 5 லிட்டர் தண்ணீரும், மற்றொன்றில் 3 லிட்டர் தண்ணீரும் கொள்ளும். (வாளியில் 12 லிட்டர் தண்ணீர் கொள்ளும்.) இந்த இரண்டு குவளைகளையும் பயன்படுத்தி, வாளியில் சரியாக 7 லிட்டர் தண்ணீரை எப்படி ஊற்றுவீர்கள்?

ஒரு பகடை விளையாட்டு

"காட்டுப் பள்ளிக்குச் செல்லும் வழியில்"




இரண்டு குரங்குகள் காட்டில் உள்ள பள்ளிக்குச் செல்ல வேண்டும். நீங்கள் அவற்றை அங்கு அழைத்துச் செல்ல வேண்டும். இதைச் செய்வதற்கு, பக்கம் 45-இல் உள்ள பகடைகளை வெட்டி (பின்னிணைப்பிலிருந்து) ஒட்ட வேண்டும். பிறகு, காய்களை வெட்டி எடுக்கவும். உங்களில் ஒருவர் சிறிய குரங்கையும், மற்றவர் பெரிய குரங்கையும் பள்ளிக்கு அழைத்துச் செல்லவும.

பகடைகளை ஒன்றன்பின் ஒன்றாக உருட்டி, பகடையின் மேல் பக்கத்தில் தோன்றும் புள்ளிகளின் எண்ணிக்கைக்குச் சமமான வட்டங்களின் எண்ணிக்கைக்கு உங்கள் காயை நகர்த்தவும்.

நீங்கள் ஒரு பழுப்பு நிற வட்டத்தை அடைந்தால், உங்கள் காயை அம்புக்குறியின் திசையில் நகர்த்தவும்.

நீங்கள் ஒரு கருப்பு வட்டத்தை அடைந்தால், உங்கள் காயை அம்புக்குறியின் திசையில் பின்னோக்கி நகர்த்தவும்.

பழுப்பு வளையம் உள்ள வட்டத்தை அடைந்தால், ஒரு வாய்ப்பை இழப்பீர்கள். குரங்கைப் பள்ளிக்கு முதலில் அழைத்துச் செல்பவரே வெற்றியாளர்.


1
2
3
4
5
6
7
8
9
10
11
12
13
14
15
16
17
18
19
20
21
22
23
24
25
26
27
28
29
30
31
32
33
34
35
36
37
38
39
40
41
42
43

II. வேடிக்கையாக எண்ணுவோம்



இந்த ஆட்டம் ஜோடிகளாக விளையாடப் பட வேண்டும், சரியாக விளையாடப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க ஒரு நடுவர் தேவை.

அட்டவணைகள் 1-a மற்றும் 1-b இல் 1 முதல் 30 வரையிலான எண்களும், 2-a மற்றும் 2-b இல் 1 முதல் 42 வரையிலான எண்களும் உள்ளன.ஒவ்வொரு அட்டவணைத் தொகுப்பிலும் ஒரே எண்கள் உள்ளன, ஆனால், அவை வெவ்வேறு விதமாக வரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

ஒருவர் அட்டவணை 1-a-வையும், மற்றொருவர் 1-b-யையும் எடுக்கவும். பின்னர், நடுவரின் ஒப்புதலில், ஒவ்வொரு வீரரும் தங்கள் அட்டவணையில் உள்ள அனைத்து எண்களையும் சரியான வரிசையில் (1-லிருந்து தொடங்கி) ஒன்றன்பின் ஒன்றாகக் கூற வேண்டும். முதலில் முடிக்கும் வீரரே வெற்றியாளர்.பின்னர் அட்டவணை 2-ஐ விளையாடவும்.

1a

25	16	21	3	6	8
23	12	4	15	7	17
28	19	30	29	20	18
27	14	10	24	1	22
9	11	5	2	26	13

அட்டவணை 1a

17	8	24	6	29	18
23	5	13	19	3	27
20	7	4	21	16	11
25	15	1	10	14	22
9	2	26	12	28	30

அட்டவணை Ib

அட்டவணை

2a

40	7	12	31	29	3
38	26	5	17	30	18
22	37	8	15	24	11
2	13	27	35	25	42
33	23	16	6	14	32
41	9	28	10	36	1
4	19	34	21	39	20





5	27	32	12	26	1
41	9	20	28	10	36
11	25	16	13	37	3
24	15	6	17	30	23
38	22	2	8	7	40
4	19	35	29	34	21
33	14	18	39	42	31


அட்டவணை 2b

III. சிறிய குச்சிகளைப் பயன்படுத்தும் விளையாட்டுகள்




இந்த விளையாட்டுகளுக்கு ஒரே நீளமுள்ள 30 சிறிய குச்சிகள் தேவைப்படும். பலர் விளையாடலாம். செயல்முறையை முதலில் முடிப்பவரே அல்லது (முடிந்தால்) அதை முடிக்க ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளைக் கண்டுபிடிப்பவரே வெற்றியாளர் ஆவார். விளையாட்டு முடிந்ததும், ஆட்டக்காரர்கள் 43-44 ஆம் பக்கங்களில் விடைகளைக் கண்டறிந்து, தாங்களாகவே சரிபார்த்துக் கொள்வார்கள்.

குச்சிகளை இந்தப் படத்தில் உள்ளவாறு அடுக்கவும்:




1) ஒரே அளவிலான நான்கு சதுரங்கள் மீதமிருக்கும் படி இரண்டு குச்சிகளை நீக்கவும், . இதை ஒன்றுக்கும் மேற்பட்ட வழிகளில் செய்ய முயலவும்.

குச்சிகளை இந்தப் படத்தில் உள்ளவாறு அடுக்கவும்:



2) ஒரே அளவிலான ஐந்து சதுரங்கள் தோன்றும் வகையில் இரண்டு குச்சிகளின் இடத்தை மாற்றவும். இதை ஒன்றுக்கும் மேற்பட்ட வழிகளில் செய்ய முயலவும்.

குச்சிகளை இந்தப் படத்தில் உள்ளவாறு அடுக்கவும்:



3) இப்போது ஒரு குச்சியை நீக்கி, ஒரே அளவிலான மூன்று சதுரங்கள் மீதமிருக்குமாறு அடுக்கவும்.

குச்சிகளை இந்தப் படத்தில் உள்ளவாறு அடுக்கவும்:



4) இப்போது, மூன்று முக்கோணங்களுக்குப் பதிலாக இரண்டு முக்கோணங்கள் தோன்றும் வகையில் இரண்டு குச்சிகளின் இடத்தை மாற்றவும்.

IV. மாயச் சதுரங்கள்



மாயச் சதுரம் என்பது, ஒவ்வொரு கோட்டிலும், ஒவ்வொரு வரிசையிலும், மற்றும் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்குக் குறுக்காகவும் உள்ள எண்களின் கூட்டுத்தொகை சமமாக இருக்கும் ஒரு சதுரம் ஆகும்.

உதாரணம்

2	9	4
7	5	3
6	1	8

இந்த சதுரத்தின் ஒவ்வொரு கோட்டிலும் உள்ள எண்களைக் கூட்டினால், ஒவ்வொரு முறையும் அவற்றின் கூட்டுத்தொகை 15-ஆக இருப்பதைக் காண்பீர்கள்.

இரண்டு வீரர்கள் விளையாடும் இந்த ஆட்டத்திற்காக, தலா இரண்டு வேறுபாடுகளைக் கொண்ட ஐந்து சதுரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வீரரும் 1-A அல்லது 1-B -ஐ தேர்ந்தெடுத்து, விடுபட்ட எண்களை நிரப்ப வேண்டும்.

5		
	6	
9		

சதுரம் 1-A
(கூடுதல்,18)



		3
	6	
		7

சதுரம் 1-B
(கூடுதல்,18)

தனது கட்டத்தை முதலில் பூர்த்தி செய்பவரே வெற்றியாளர்.

சதுரம் 2-A

	12	
	8	
	4	11

சதுரம் 2-B

5	12	
	8	
	4	

சதுரம் 3-A

		3
5	9	
15		

சதுரம் 3-B

7		
	9	13
		11

சதுரம் 4-A

17	21	25
27		

சதுரம் 4-B

17	21	25
		23

சதுரம் 5-A (கூடுதல், 51)

		14
	13	18

சதுரம் 5-B (கூடுதல், 51)

16	21	
		18

V. பம்பர விளையாட்டுகள்



இந்த விளையாட்டுகளில் பல வீரர்கள் பங்கேற்கலாம். பின்னிணைப்பிலிருந்து (பக்கம் 47) பம்பரங்களை வெட்டி எடுத்து, அவற்றை அட்டையிலோ அல்லது உறுதியான காகிதத்திலோ ஒட்டவும். ஒரு பம்பரத்தைச் சுழற்றுவதற்கு, கூர்முனை கொண்ட ஒரு மெல்லிய குச்சியை அதன் மையத்தில் சொருகவும்.

1) ஒரு எண்ணைக் கூட்டவும் பம்பர எண் 1-ஐ பயன்படுத்தவும்.

ஆட்டக்காரர்கள் தாங்கள் கூட்ட விரும்பும் எண்ணை (உதாரணமாக 7) முன்கூட்டியே முடிவு செய்யவும். பிறகு, தலைவர் பம்பரத்தைச் சுழற்ற வேண்டும். அது நின்றவுடன், பம்பரம் அதன் ஒரு பக்கம் மேலே உள்ளவாறு விழும். தலைவர், அந்தப் பக்கத்தில் குறிக்கப்பட்ட எண்ணைக் காட்டலாம் (அல்லது குறிப்பிடலாம்). பிறகு, ஒப்புக்கொள்ளப்பட்ட எண்ணை (உதாரணமாக 7), காட்டப்பட்ட (அல்லது குறிப்பிடப்பட்ட) எண்ணுடன் கூட்டவும். ஒவ்வொரு ஆட்டக்காரரும் தனது முடிவைக் குறித்துக் கொள்ளவும். பிறகு, பம்பரத்தை மீண்டும் சுழற்றி, இந்தச் செயல்முறையை மீண்டும் தொடர்க

.ஆட்டத்தின் முடிவில் அனைத்து முடிவுகளும் சரிபார்க்கப்படும். யாருடைய கணக்கீடுகள் அனைத்தும் சரியாக உள்ளதோ அவரே வெற்றியாளர்.

குறிப்பு: ஒப்புக்கொள்ளப்பட்ட எண்ணுக்கும், பம்பரத்தில் உள்ள எண்ணுக்கும் உள்ள கூட்டுத்தொகை 100-ஐ விட அதிகமாக இருக்கக் கூடாது.

2) ஒரு எண்ணைக் கழிக்கவும்

இந்த விளையாட்டில் பம்பர எண் 2 பயன்படுத்தப்படுகிறது.

இந்த விளையாட்டு முதல் விளையாட்டைப் போலவே விளையாடப்படுகிறது. ஒரே வித்தியாசம் என்னவென்றால், பம்பரத்தில் உள்ள எண்களிலிருந்து ஒப்புக்கொள்ளப்பட்ட எண் கழிக்கப்படுகிறது.

குறிப்பு: ஒப்புக்கொள்ளப்பட்ட எண் பம்பரத்தில் உள்ள எந்த எண்ணையும் விட அதிகமாக இருக்கக் கூடாது.

3) ஒரு பம்பரம் மற்றும் ஒரு பகடை

பம்பர எண் 1 அல்லது 2 மற்றும் புள்ளிகள் கொண்ட ஒரு பகடையும் (ப. 45) இந்த விளையாட்டில் பயன்படுத்தப்படுகின்றன.

ஒருவர் பம்பரத்தைச் சுழற்றும் போது, மற்றொருவர் பகடையை எறியவும். பம்பரத்திலும் பகடையிலும் தலா ஒரு எண் தெரியும். முதலில், இந்த எண்களைக் கூட்டவும். பிறகு, இவ்விரண்டில் பெரிய எண்ணிலிருந்து சிறிய எண்ணை கழிக்கவும். முதலில் சரியான விடையைக் கூறும் வீரருக்கு ஒரு புள்ளி கிடைக்கும்.

4) 100 வரை கூட்டவும்

இந்த விளையாட்டில் பம்பர எண் 3 பயன்படுத்தப்படும்.

ஒவ்வொரு ஆட்டக்காரரும் தனது முறை வரும்போது பம்பரத்தைச் சுழற்றி, அதன் பக்க வாட்டில் தோன்றும் எண்ணைக் குறித்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு முறைக்குப் பிறகும், அவர் தனது புதிய எண்ணை முந்தைய மொத்தத்துடன் சேர்க்க வேண்டும்.

100-ஐ முதலில் எட்டுபவரே வெற்றியாளர்.

5) இரண்டு பம்பரங்கள்


இந்த ஆட்டத்தில் பம்பர எண் 3 மற்றும் 4 பயன்படுத்தப்படும்.

ஆட்டக்காரர்கள் முன்கூட்டியே ஏதேனும் ஒரு ஈரிலக்க எண்ணைத் (உதாரணமாக 25) தேர்வு செய்க. பம்பர எண் 4- ஐ (+ மற்றும் – குறியீடுகளுடன் கூடிய) சுழற்றவும், பின்னர் எண்களுடன் கூடிய பம்பர எண் 3-ஐ சுழற்றவு;ம்.

பம்பர எண் 4-ல் + குறியீடு காட்டினால், பம்பர எண் 3-ல் காட்டிய எண்ணை, ஒப்புக்கொள்ளப்பட்ட எண்ணுடன் கூட்டவும். பம்பர எண் 4-ல் – குறியீடு வந்தால், பம்பர எண் 3-ல் காட்டிய எண்ணை, ஒப்புக்கொள்ளப்பட்ட எண்ணிலிருந்து கழிக்கவும். எல்லா பதில்களையும் சரியாக அளிக்கும் ஆட்டக்காரரே வெற்றியாளர் ஆவார்.

புதிர்களுக்கான பதில்கள்

39. ஒரு கிலோகிராம் பஞ்சும் ஒரு கிலோகிராம் இரும்பும் சரியாக ஒரே எடையைக் கொண்டுள்ளன.
42. அந்தக் குடும்பத்தில் 6 குழந்தைகள் உள்ளனர்.
45. ஏழு மெழுகுவர்த்திகளும் மேசையின் மீது அப்படியே இருக்கும்.
48. 3 நிமிடங்கள்.
51. ஏதுமில்லை. மற்ற சிட்டுக்குருவிகள் எல்லாம் பூனையைக் கண்டு பயந்து பறந்து விட்டன.

53 

57. 5 லிட்டர் குவளையில் இரண்டு முறை 2 லிட்டர் தண்ணீரை ஊற்றவும், பிறகு 2 லிட்டர் குவளையில் 2 லிட்டர் தண்ணீரை ஊற்றவும். ஆக மொத்தம் 6 லிட்டர் கிடைக்கும்.

60. முக்கோணம், ஏனெனில் மற்ற வடிவங்கள் ஒவ்வொன்றிற்கும் 4 கோணங்கள் உள்ளன.

63. அந்தச் சிறுவன் 40 படிகள் ஏற வேண்டும் (தரைத்தளத்திலிருந்து முதல் தளத்திற்கு 20 படிகள் மற்றும் முதல் தளத்திலிருந்து இரண்டாம் தளத்திற்கு 20 படிகள்).

66. சிறுவன் ஆறு முறை அந்த கட்டையை வெட்டினான்.

69 


72. 6 குழந்தைகள்.
75. மூன்று யானைகள் ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாக நடந்து கொண்டிருந்தன.


78 

81. சகோதரன் எப்போதும் தன் சகோதரியை விட 3 வயது மூத்தவனாக இருப்பான்.
84. சிறுமி வாளியில் 3 லிட்டர் தண்ணீரை நான்கு முறை ஊற்றி, பின்னர் 5 லிட்டர் தண்ணீரை வாளியிலிருந்து வெளியே ஊற்ற வேண்டும்.

குச்சிகளைக் கொண்டு விளையாடும் விளையாட்டுகளுக்கான பதில்கள்

செயல்பாடுகள் 1 முதல் 4 வரையிலான விடைகளில், அகற்றப்பட வேண்டிய குச்சிகள் அடித்து நீக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட குச்சிகளின் புதிய இடங்களைப் புள்ளியிடப்பட்ட கோடுகள் காட்டுகின்றன.







பின்னிணைப்பு

ஒரு பகடை (விளையாட்டு: "காட்டுப் பள்ளிக்குச் செல்லும் வழியில் ")

ஒரு பகடை (விளையாட்டு 3 "ஒரு பம்பரமும் ஒரு பகடையும்")





காய்கள் (விளையாட்டு "காட்டுப் பள்ளிக்குச் செல்லும் வழியில்"



பம்பரம் எண் 1
(ஆட்டம் 1 மற்றும் 3)

பம்பரம் எண் 2
(ஆட்டம் 2 மற்றும் 3)







பம்பரம் எண் 3
(ஆட்டம் 4 மற்றும் 5)

பம்பரம் எண் 4
(ஆட்டம் 5)







Н. Ф. Вапнир

ЗАБАВНАЯ МАТЕМАТИКА

Редактор *Н. И. Максименко*
Художник *Б. Л. Рытман*
Художественный редактор *Л. Ф. Малышева*
Технический редактор *Г. Е. Петровская*

Сдано в набор 11.01.84. Подписано к печати 17.05.84. Формат $70 \times 90^1/_{16}$. Бум. кн.-журн. Печать офсетная. Усл. печ. л. 3,51. Усл. кр.-отт. 7,61. Уч.-изд. л. 2,58. Тираж 25 000 экз. Заказ 748. Цена 15 коп.

Ордена Трудового Красного Знамени издательство «Просвещение» Государственного комитета РСФСР по делам издательств, полиграфии и книжной торговли. 129846, Москва, ГСП-110, 3-й проезд Марьиной рощи, 41.

Смоленский полиграфкомбинат Росглавполиграфпрома Государственного комитета РСФСР по делам издательств, полиграфии и книжной торговли. Смоленск-20, ул. Смольянинова, 1.

15 к.

